# குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 7 — 4 — 59 செவ்வாய் | இசை: 44


## விடுதலை ஆசை!

தனித் தமிழ் வண்ணம்

தனதன தான தனதன தான
தனதன தான தன தானு

கருவிழி ஓடி உலகொடு பேசி
எனதிட மீளும் அழகோனே
கழைநிகர் காதல் உழவினில் ஆன
கதிர்மணி யேஎன் இளையோய்நீ,

பெரியவ னுகி எளியவர் வாழ்வு
பெருகிடு மாறு புரியாயோ
பிறர்நலம் நாடி ஒழுகினை யாக
இருசெவி வீழ மகிழ்வேனே

தெரிவன யாவும் உயர்தமி ழாக
வருவது கோரி உழையாயோ
செறிதமிழ் நாடு திகழ்வது பாரீர்
எனஎனை நீயும் அழையாயோ

ஒருதமி ழேந முயிரென யாரும்
உணர்வுறு மாறு புரியாயோ
உயர்தமிழ் நாடு விடுதலை வாழ்வு
பெறஉன தாசை பெருகாதோ!

# திருடாதே!

—★ கு ★—

குருடன் இடத்திலும் திருடாதே ஒன்று!
கொல்லுமே உன்னை உன்நெஞ்சே நின்று
(குருடன்)

திருடன் ஒருதரம் தப்பிவிட் டாலும்
திருடித் திருடித் திருடிமேன் மேலும்
பெரிய திருடனாய் பலஆண்டின் காலம்
பெறுவான் தண்டனை! சிரிக்குமே ஞாலம்!
(குருடன்)

பசித்த போதிலும் பொறுப்பது பாங்கு
பருக்கை ஒன்றைத் திருடலும் தீங்கு
பிசைந்த கூழுக்கும் பிறர்உப்பு வேண்டாம்
பிழை செய்யும் நண்பனை யும்விட்டு நீங்கு
(குருடன்)

நீபடி! நீஉழை! நீபிழை நன்றாய்
நீபிறர்க் குதவிசெய் நற்குணக் குன்றாய்
நீபடி செந்தமிழ் நூலெலாம் ஒன்றாய்
நீதமிழ்க் குள்ள பகைஎல்லாம் வென்றாய்
(குருடன்)

# படார்!

★★★

படார்என்று காசுதரும் பைந்தமிழர் கையிற்
படார்!திருடும் பார்ப்பார்மேல் ஐயப் - படார்!தீப்,
படப்படப்ப டார்படார் என்று வெடித்தார்
மடப்பசங்கள் சூழரங்கத் தார்.



புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௯௦ பங்குனி ௨௫

# தமிழ்

<✱>

யாம் "வந்தவர்மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?" என்ற தலைப்பின் கீழ் எழுதிவரும் சொல்லாராய்ச்சி பற்றி அடிக்கடி அஞ்சல்கள் வருகின்றன. அவையனைத்தும் நம் தமிழர்களாலேயே எழுதப்பெற்றவையாகும்.

அவ்வாறு நம் தமிழர்கள் எழுதும் அஞ்சல்களில் காணப்படுவன பெரும்பாலும், அவ்வாரியன் இவ்வாறு தங்கள் சொல் விளக்கத்தை மறுத்தான் அப்பார்ப்பான் இப்படி மறுத்தான் என்பனவேயாகும்.

சிறுபான்மையாக, இன்ன தமிழ்ப்புலவர் முன்னமே இப்படி எழுதியிருக்கிறார் இன்ன பேராசிரியர் முன்னமே இப்படி எழுதியுள்ளார் அவைகள் அனைத்தும் உங்கள் கருத்துக்களை எதிர்க்கின்றன என்பவையாகும்.

ஆயினும் எந்த ஆரியனும், எந்தப் பார்ப்பனனும் எமக்கு நேரில் எந்த மறுப்பையேனும் தெரிவிக்கத் துணிந்தானா எனில் இல்லவேயில்லை.

எந்தத் தமிழ்ப் புலவராவது, எந்தத்தமிழ்ப் பேராசிரியராவது தம் நிலையில் நின்றோ பார்ப்பனரைச் சார்ந்து நின்றோ நம் ஆராய்ச்சியை மறுத்துள்ளார்களா எனில் இல்லவேயில்லை.

சிங்கையிலிருக்கும் ஒரு பார்ப்பனக் கீழ்மகன் தன் அண்டையிலிருக்கும் தமிழனை நெருங்கி அந்தத் தமிழனின் மூளையைக் குழப்பினாலே போதும் என்று கருதி இன்ன சொல் தமிழ்ச்சொல்லன்று அது ஆரியமே என்பான்.

ஏனடா பார்ப்பனனே உனக்கென்னடா தெரியும். தெரிந்தால் காரணத்தோடு மறுப்பு எழுதேடா என்று கேட்க நம் தமிழனுக்கும் போதிய கையிருப்பும் துணிவும் இருப்பதில்லை இது வருந்தத் தக்கது.

தமிழ்ப் புலவர்களும் தமிழ்ப் பேராசியர்களும் இன்று எதை அடைந்து மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றார்கள் எனில் அது சிறை அன்று; அண்ணாந்தாள்!

'எனக்கு நான் தலைவன், எவனுக்கும் நான் கட்டுப்பட்டேனில்லை. ஆழத்தில் புதைக்கப் படுகின்ற என் அன்னைக்குத் - தமிழுக்கு நான் தொண்டு செய்வதில் என்னவரினும் அஞ்சேன்' - இஃதோர் பெரும்பதம், இதை நம் தமிழ்ப் புலவர் – தமிழ்ப்பேராசிரியர் அடைந்தால் அந்த நாள் தமிழகத்தின் மீட்சி நாளாகும்.

சக்கரவர்த்தித் திருமகன் என்பது கொட்டை எழுத்தால் அமைந்த தலைப்பு. தலைப்பே பிழை; இந்தத் தலைப்புடைய நூலோ அதற்கு முன்னிருந்த ஓர் ஆரிய நூலின் பார்த்தெழுதல். இதை எழுதியவருக்கும் தமிழுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, இருந்ததில்லை. ஆனால் நேரு பல்லாயிரம் வெண்பொற்காசுகளை இதற்குப் பரிசாக வழங்கினார். ஏன்? எழுதியவரின் மகள் காந்தியின் மருமகள்.

இங்குத் தமிழ்ப் புலவர் தமிழ்ப் பேராசிரியர் என்ன நினைக்கிறார்கள். பார்ப்பானை மகிழப் பண்ணினால் பரிசு கிடைக்குமே என்பதுதான். எடுத்துக்காட்டாக இதைக் கூறினோம். தமிழ்ப் புலவர் பேராசிரியரின் அண்ணாந்தாளைக் காண்க. ஆயினும் தமிழருக்கு எந்தப் பார்ப்பானாலும் அண்ணாந்தாள் பூட்டிவிடமுடியாது தமிழரே அதை ஆக்கி அணிந்துகொண்டு பணிந்து செல்கின்றார்கள்.

ஆரிய மறையிலேனும், அதன்பின் வந்த காளிதாசன் பாரவி செய்த இராமாயணம், கிருதார்ச்சுனியத்திலேனும் மற்றெந்த நூற்களிலேனும் பெரும்பான்மைத் தமிழ்ச்சொற்களேயன்றித் தனியாரியத்தைக் காணமுடியாது என்ற உண்மை எம் தமிழ்ப் புலவர்க்கும் தமிழ்ப்பேராசிரியர்க்கும் தெரியும். ஆனால் அதை இன்றளவும் உரக்கக் கூறியவர்கள் உண்டா

# வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

## சூது

இது வடசொல் அன்று. தூய தமிழ்க் காரணப்பெயர். சூழ் வினைமுதனிலை தல் என்ற தொழில் இறுதிநிலை பெற்றுச் சூழ்தல் என்றும் அல் என்ற தொழில் இறுதிநிலை பெற்றுச் சூழல் என்றும் வு என்ற தொழிலிறுதிநிலை பெற்றுச் சூழ்து என்றும் வரும். எனினும் சூழ்தல் சூழல் சூழ்வு சூழ்து அனைத்தும் பொருளால் ஒன்றே. சூழ்து - விரகு (உபாயம் என்பர் வடசொல்லார்) சூது; இடைக்குறை எனவே சூது விரகால்பிறர் பொருள் பறித்தல் என்பது. சூது, அம்சாரியை பெற்றுச் சூதம் எனவும் வருவதுண்டு. குன்று குன்றம் மன்று மன்றம் என்பவற்றிற்போல.

இனிச், சூழ்து என்பது சூது என இடையிலுள்ள ழ் இல்லாதொழிந்தது எப்படி எனில் அது இடைக்குறை என்னும் தமிழிலக்கணம். போழ்து என்பது போது என்று ஆனதுபோல.

எனவே சூது தூய தமிழ்க் காரணப்பெயர், வடநூலில் வரும் த்யூத என்பதன் திரிபல்லவா சூது என்று கேட்பது முடிச்சுமாறித்தனம் என விடுக்க.

## விஞ்சை

இதை விந்த்யா என்பதன் திரிபு என்பார் தமிழறியார். விஞ்சுதல், (மிஞ்சுதல்) என்ற சொல் தமிழில்தான் உண்டு. வித்யா என்பதோ விந்த்யா என்பதோ விஞ்சை எனவராது வரத் தேவையுமில்லை.

விஞ்சுதல், விஞ்சை, விஞ்சு என்பதை முதனிலையாகக் கொண்ட தொழிற்பெயர்களே. பொருளும் ஒன்றுதான்.

## சடை

இதைப் பலர் ஜடை என்று கூறி இழுக்குவர். இதுமட்டுமன்று அவர்கள் சகரத்தையெல்லாம் ஜ என்றே வாய்படுத்து மகிழ்ந்து கொள்வர். அது பிழை என்பதும் மானக்கேடான செயல் என்பதும் அவர் அறியார். இந்தப் பிழையுணர்ச்சி எங்கிருந்து தோன்றியது எனின், சடை என்பது ஜடா என்ற வடசொல்லின் சிதைவென்று கூறித் திரியும் ஆரியச் சார்பினரிடமிருந்தே தோன்றியது என அறிதல் வேண்டும்.

சடை தூய தமிழ்க்காரணப்பெயர். திரித்து விட்ட தலை மயிரைக் குறிக்கும் சடை என்ற இச்சொல், முதலில் ஆலின் விழுதையும் வேரையும் குறித்தது. அது பின்னர் விழுது, வேர், போன்றதான மயிர்த்திரிக்கு உவமை ஆகு பெயராயிற்று வடசொல் அன்று. வடநூற்களில் அச்சொல்உள்ளதே எனின், தமிழினின்று எடுத்தாண்டனர் எனத்துணிக.

---

எனில் இல்லவேயில்லை! மறைமலையடிகளும் சைவம் எனும் ஒன்றுக்கு அடிமைப்பட்டே சில உண்மைகளைக் கூருமல் விடுத்துள்ளார்.

இன்றைய நிலைமை வேறு; அது தமிழர் வாழ்வதா சாவதா என்பதாகும்.

இங்கிலையிலும் தமிழ்ப்புலவர் தமிழ்ப் பேராசிரியர் விழிகள் திறக்கமுடியாதிருக்கலாம். தமிழர்கள் சாகத் துணிய வேண்டும் அதனுல் வாழ்வை நிலைநாட்ட வேண்டும். தமிழனின் கண்ணும்கருத்தும்தமிழின்வேரைநோக்கட்டும்! அதன் பழமையைப் பார்க்கட்டும். தமிழன்றி இந்த நாவலந்தீவில் எது மொழி? - எத்தனை மொழிக்கு? - எந்த எந்த நாட்டுமொழிக்கு நம் தமிழ், தாய்? - என்பதை எண்ணட்டும். ★

## நினைவுறுத்துகிறேம் . . . !

இயற்பெயரோ, புனைபெயரோ இன்றி வெளியிடப்பெறும் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்படுபவையே.

அமைச்சர்—.

# வள்ளல் சிவாசி கணேசனார் வாழ்க!

அள்ளிக் கொடுத்தனர் ஓரிலக் கத்தை அறிவுதரும்
பள்ளிக்குட் பிள்ளைகட் கெல்லாம் உணவு பரிந்தளிக்க;
உள்ள முதலமைச் சர்காம ராசர் உவந்துபெற்றார்
வள்ளல் சிவாசி கணேசனார் வாழிய வாழியவே!

ஓரிலக் கப்பணம் மாணவர் உண்ணக் கொடுத்ததன்றி
வாரிப் பலவாம் நிறுவனங் கட்கும் வழங்குவதாய்
ஊரினர் கேட்க உறுதி யளித்திட்ட உண்மைவண்மைச்
சீரியர் ஆன சிவாசி கணேசனார் வாழியவே!

ஊணுறக் கங்கொளார் உற்ற மனைவி யுடன்கிடவார்
வீணர் வலைக்குட் படார்மட மாதர் விழிக்குட்படார்
வாணளில் இந்நாள் வரைக்கும் இராப்பக லாய்உழைத்தே
காண்நில வானார் கணேசர் படக்கூத்தர் மீன்களுக்கே!

அவர்இவர் என்று துலகத்தி லுள்ளவர் உள்ளமெல்லாம்
கவர்பவ ராய்ப்படக் கூத்தர் வானத்திற் கதிரவனாய்
எவர்இது நாள்மட்டும் தோன்றினார் பொன்பெற்றார் ஈத்துவந்தார்?
எவர்புகழ் ஏற்றார் அவர்தாம் கணேசனார் வாழியவே!

குணத்தால் அடித்தனர் குள்ளர் எதிர்ப்பைத் தமிழகத்தில்
பணத்தால் அடித்தார் அறியாமைப் பேயைப்பார்ப் பார்மனத்தில்
வணத்தால் அடித்த முகம்,நடிப் பால்அச் சடித்துவண்மை
மணத்தால் அடித்தார் புகழைக் கணேசனார் வாழியவே!

# கேட்டலும் கிளத்தலும்

★<▭>★

*காரியம், காரணம், சலம், மனம், தாமரை இவைபோன்ற சொற்கள், இலக்கண வாயிலாகத் தமிழ்ச் சொற்களே என்று நீங்கள் வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா? என்ற தலைப்பின்கீழ் விளக்கியுள்ளீர்கள். இவை வடசொற்கள் என்று பேராசிரியர், அ. கி. பரந்தாமனார் நல்ல தமிழ் எழுத வேண்டுமா என்ற தம் நூலில் சொல்லுகின்றார்.*

இரா. கணபதி
*14, கம்போங்லாமா தெரு,* சிங்கப்பூர்.

**பேராசிரியர் பரந்தாமனார், நான் வந்தவர் மொழியா வெளியிடுவதற்கு முன்னமே எழுதி விட்டார், இல்லையானால் அச்சொற்கள் வடசொற்கள் என்பதைக் காரணத்தோடு விளக்கியிருப்பார் அல்லவா?**

★ ★ ★

*இங்கு (சிங்கப்பூரில்) ஆரியர் ஒருவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "இந்தியன் மூவி நியூஸ்" என்னும் திரைப் படத் திங்களிதழில் அவ்வாரியர் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் வடசொற்களாகவே பெய்து வைக்கிறார்.*

இரா. கணபதி
*14, கம்போங்லாமா தெரு,* சிங்கப்பூர்.

**உப்பொடு, நெய், பால், தயிர் காயம் பெய்து அடினும் கைப்பறு பேய்ச்சுரையின் காய். தமிழரைப் பற்றியுள்ள இந்த நோயைத் தீர்க்கும் மருந்து பெரியாரிடந்தான் இருக்கிறது. உங்கள் ஒத்துழைப்பே அதற்கு விலை.**

★ ★ ★

*சூது, த்யூத என்பதின் திரிபென்றும், விஞ்சை, வித்யா என்பதன் திரிபென்றும் வையாபுரியார் சொல்லியுள்ளார். எப்படி?*

கி. அறிவழகன், மூக்கன்
வேலூர்.

**வையாபுரியார், தமிழே ஆரியத்தினின்று பிறந்தது என்று சொன்னவர்; சூதும் விஞ்சையும் வடசொற்கள் அல்ல! விளக்கம் வந்... என்ற தலைப்பின் கீழ் இருக்கிறது**

**இவ்வாறு, அது வடசொல் இது வடசொல் என்கிறவர்கள் ஏன் அவ்வாறு உளறுகின்றார்கள்? - அவர்கட்கு வடசொல்லும் தெரியாது தமிழும் தெரியாது. ஒன்று மட்டும் தெரியும் தமிழைத் தாழ்த்துவதன் வாயிலாகத் தமிழரைத் தாழ்த்தித் தமிழரின் உரிமையைத் தாழ்த்தித் தமிழர் பொருளைக் கொள்ளையடிப்பது என்பது!**

# தலைநகரில் தமிழ் எங்கே?

மா. இராம. தமிழ்ச்செல்வன்.

யாரோ இருகல்லூரி மாணவர்கள்! அவர்கள் தமிழார்வம் கொண்டவர்களாகத்தான் இருக்க வேண்டும் பெரும்பாலும் தமிழில் பேசிக்கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருந்தனர். அதில் ஒரு மாணவன் மற்றவனைப் பார்த்து நீ தமிழ்! தமிழ்!! என்கிருயே! இந்தப் பூங்காவிற்கு என்ன பெயர் தெரியுமா? பார்க்! ஆதுவும் என்ன பார்க் தெரியுமா? நேப்பியர் பார்க் என்ருன் எனக்கு அப்போது தான் நினைவு வந்தது. சற்று நிமிர்ந்து மேலே பார்த்தேன் அங்குக் கொட்டை எழுத்தில் நேப்பியர் பார்க் என்றிருந்தது. அங்கு வீசிக்கொண்டிருந்த தென்றல் எனக்குப் புயல் காற்றுப்போல் ஆகி விட்டது. உடனே நண்பர் நாவரசுவை நடங்கள் போவோம் என்றேன். எங்குப்போக வேண்டும் என்ருர். வேறுபூங்காவிலாவது போய் உட்காருவோம் என்றேன்.

எதற்காக என்ருர்!

இதுதான் – எங்குச் சென்ருலும் வேற்று மொழியின் காற்றம் என்றேன்.

அதற்கு அவர் சிரித்துவிட்டு வேறு பூங்காவில் மட்டும் தமிழ் மணக்கும் என நினைத்து விட்டீரோ? அதற்கும் பெயர்கள் என்ன தெரியுமா? ராபின்ஸன் பார்க்! பீப்பிள்ஸ் பார்க்! என்று சொல்லிக் கொண்டே போனுர். போதும்! நிறுத்துங்கள்! நான் சென்னையை விட்டே திரும்பி விடுகிறேன் என்றேன்.

ஐயையோ! இன்னும் சென்னையில் நீங்கள் பார்க்கவேண்டியது எவ்வளவோ உள்ளதே! அதற்குள் நீங்கள் மன வேதனைப்பட்டால்! எல்லாவற்றையும் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள், அதுதான் நல்லது என்ருர். நானும் அவர் வேண்டுகோளை மறுக்காது பின் தொடர்ந்தேன்.

வழி நெடுக சாலையின் இருபுறமும் பல விளம்பரப்பலகைகள் தொங்கியவண்ண மிருந்தன.

என்னையறியாமல் எனது கண்கள் அவைகளைச் சந்தித்தன. தமிழர் அல்லாத சிற்றுண்டிச் சாலைகளின் பெயர்கள் எல்லாம் ஆரியபவன், மாடர்ன் கபே, உடுபி ஹோட்டல் என்று அவர்கள் மொழிகளிலேயே எழுதிச் சிறப்பாகத் தொங்க விடப்பட்டிருந்தன.

தமிழர்கள் நடத்தும் சிற்றுண்டிச் சாலைகளை நோக்கினேன். அவைகளோ சிட்டி கபே, ரத்தின விலாஸ், சாமீஸ் கேப், சாந்தா விலாஸ், கிருஷ்ணு கபே இந்தியா கேப், கபே காஸினே, என்ற பெயர்களில் உணவகத்தைத் திறந்து வைத்து உட்கார்ந்துள்ளனர்.

அவரைப் பின் தொடர்ந்தவாறு சென்று கொண்டிருக்கையில் திடீரென்று சற்று நின்ருர். இது தான் திரு. வி. க. நகர், இது தொழிலாளிகள் நிறைந்த இடம் என்ருர். என்னையறியாமல் என் மனம் மாநில முதலமைச்சருக்கு நன்றி செலுத்தியது. தமிழனின் பெருமையை ஒரு தமிழனுல்தான் உணரமுடியும் என்பதற்குச் சான்ருகத் திரு. வி. க நகர் அமைந்துவிட்டது. வாழ்க தமிழக முதலமைச்சர் திரு. காமராசர் என்றது எனதுள்ளம்!

நான் எதையோ எண்ணியவாறு இருப்பதைக் கண்ட நண்பர் இது ஒன்றே தமிழன் பெயரால் அமைந்த நகர். மற்றவைகளோ ஜார்ஜ் டவுன், கிரேநகர், கான்ரான்ஸ்மித் நகர், பார்க் டவுன் என பற்பலவாம் என்ருர்.

நல்லது'நண்பரே! இனி நாம் போவோம் என்றேன். வழியில் ஒரு பெரிய மருத்துவ மனையைக் காட்டினுர். இதனுள்நுழைந்தால் ஒரு தமிழ்ப்பெயர் கூட கிடைக்காது என்ருர். அது இயற்கைதானே! தலைநகரில் இதற்குமட்டும் விதிவிலக்கா என்ன! இதில் உள்ள பெயர்களை சற்று கூறுங்களேன் எனக்கேட்டேன். ஹாவ்லக் வார்டு, ப்ளாரன்ஸ் வார்டு, வெண்லக்வார்டு என்ருர். சரி போவோம் என்றேன்.

மாலை நேரம் திருவிழா போன்றிருந்தது. அவ்விடம் மக்கள் யாவரும் பல பொருள்களை வாங்கிய வண்ணமிருந்தனர், பல்வேறு இனத்தாரும், பல்வேறு மொழியினரும் அங்கு வந்து தாங்கள் விரும்பியதை வாங்கிச் சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சி. நானும் நண்பர் நாவரசுவும் பல பழைய நூல்களில் சிலவற்றை வாங்கினேம், ஏதோ கொஞ்சம் மலிவு!

என்னங்க! இதன் பெயரும் என்னவோ பார்த்தால் பெரிய கட்டிடம்போல் தோன்றுகிறதே என்றேன். இதன் பெயர்தான் மூர்மார்க்கெட், இது நகரசபையின் கட்டிடம். இதற்குக்கூட தமிழ்ப்பெயர்

# திருவரங்கப்பெருமாள்

திருவரங்கத் தார் தீய்ந்தார் அன்னூர் மனைமார்,
இருவரங்குத் தீய்ந்தார்கள் இந்தப் — பெருநாள்
ஓர்விளம்பிப் பங்குனியின் ஒன்பதாம்நாள்! இதுபார்ப்
பார்விளைத்த தன்றிவே ரூர்.

மேம்பட் டுலகளந்தார் வேகையிலே தாம்கிடந்த
பாம்புப் படுக்கையும் வெந்ததுவாம் — சாம்பலாய்ப்
பூண்ட மணியெல்லாம் போனதுவாம்! பொன்னெல்லாம்
நீண்டோடிற் றும்உருகி நேர்.

கருவறையில் உற்றதீக் காட்டை அவிக்கப்
பெருமாளால் ஆமோ? பெருமாள் — திருவடியால்
ஊர்ப்பானை எல்லாம் உருட்டி உயிர்வாழும்
பார்ப்பாரால் ஆமோ? பகர்.

மலரவனை யும்சிவனை யும்படைத்த மாயன்
சிலர்வைத்த தீயணைத்த லின்றிக் — கலகலென
அத்தீயில் வேகையிலே ஆன திருச்சியினோர்
அத்தீ அணைக்கவந் தார்.

வருவதற்குள் மண்ணுண்டான் தீயுண்டான் மற்றும்
கருவறையில் எல்லாம் கரியாய்க் -- கரிந்தனவாம்
நெட்டைக் கருங்கல்லே நீறுகும் போதுவண்ணப்
பட்டாடை என்ன படாது !

---

இல்லையே என்கிறாயா? இங்குள்ள மக்கள் அப்படி! அவர்கள் நோக்கமே வேறு! என்றார். இதுமட்டுமா இந் நகரசபை எழுப்பிய கட்டிடங்கள் அனைத்திற்கும் பெயர் என்ன தெரியுமா? ரிப்பன் பில்டிங் ஸ்டேடியம், விக்டோரியா ஹால் பவலியன். இப்படிப்பல பெயர்கள் இன்றும் உள்ளது என்றார்.

தமிழ் நாட்டிற்கு இப்படிப்பட்ட தலைநகர் ஒன்று இருப்பதே பெருத்த அவமானம், இதை மாநில அரசாங்கமும் சென்னை நகர சபையும் ஒன்று சேர்ந்து கடையில் தொங்கவிடப்படும் விளம்பரப் பலகைகளும், மற்ற பொதுவிடங்களான பூங்காக்கள், நடைபாதைகள், ஆகியவற்றிற்கெல்லாம் தூய தமிழ்ப் பெயர்களை வைத்துவிட்டால் அரங்க ரத்தினம் போன்றவர்களும், இளவழகன் போன்றவர்களும் இதற்கு வந்து உண்ணாவிரதம் இருக்கவேண்டியிராது. எங்கு இதை கவனிக்கப்போகின்றனர்.

சற்றுத்தொலைவில் சென்றிருந்த நண்பர் கை தட்டி கூப்பிட்டார். வாருங்கள் திரைப்படம் ஒன்று பார்த்துவிட்டு வருவோம் என்றார். சரி! என புறப்

# செத்த பத்து!

கரிய பெருமாள் அடியார் முகத்தில்
கரியைத் தடவிக் கரியாய்க் — கரிந்தானும்
தானிருந்தும் பார்ப்பனரைத் தாங்கினான் தான்செத்தும்
தானம் தரும்படிவைத் தான்.

கருங்கல் எரிந்ததென்று கண்ணீர் சொரிந்தார்
திருந்தா மடையர்! சிரித்தே -- இருந்தார்கள்
பார்ப்பார்! திருமால் படிவம் புதுக்கையிலே
ஊர்ப்பணத்தை உண்ணலாம் என்று.

ஆயிரம் ஆண்டாய்ப்பல் லாயிரம் கோடிஎன்று
தீயாப் பணம்பறித்தான் தீயானான்! — தாய்நாடே
செல்வத் திருக்கோயில். நீபெற்ற மாணவரின்
கல்வித் திருக்கோயி லாக்கு.

நடமாடக் கோயில்ஆம் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பரமர்க் -- குடன்ஆகும்!
என்றார் திருமூலர்! நெய்வடையை ஈந்தாரே
தின்றாரா கல்லார் சிறிது?

ஆளவந்தீர் மக்கட் கறிவைப் பெருக்காமல்
மாளுகின்றீர் மாளுங்கள்! மாளுங்கள்!! — நாளும்
உருவணக்கத் தாலே திருவழியும்! உள்ளப்
பெருவணக்கத் தால்பெருகும் பேறு!

---

பட்டேன். தியேட்டர் பெயர்களைக் கூற வேண்டுமா? அதுவும் வழக்கம்போல ஓடியன். மிட்லாண்டு ஈராஸ், வீனஸ், பிரபாத், கிரௌன், பிரைட்டன், நூர்ஜஹான், நேஷனல், கெயிட்டி. பிராட்வே இன்னும் என்னென்னவோ! ஒரு தமிழ்ப்படமாக பார்த்துப் போவோம் என்றேன்.

ஏதோ ஒரு தியேட்டர்! நினைவிற்கு வரவில்லை நுழைவுக் கட்டணம் செலுத்திவிட்டுப்போய் உட்கார்ந்தோம். படம் ஓடியது. படமா அது! வெளியில்தான் சற்று தமிழ்ப்பெயர்! உள்ளே அத்தனையும் கலப்படம்! தமிழர் பண்பாடு தமிழர் நாகரீகம், தமிழ்க்கலை, தமிழ்க்கூத்து, தமிழ்பாட்டு ஒன்றுகூட இல்லை! ஒரே காட்டுக் கூச்சல்! நாங்கள் இருவரும் ஒரு மனதுடன் வெளிவந்துவிட்டோம். இரவு அவர்கள் வீட்டில் உணவருந்திவிட்டுப் படுத்துறங்கினோம். காலையில் சேவல் கூவிற்று. இனிசென்னையில் ஒருநொடியும் இருக்கப் போவதில்லை என்று முடிவு செய்து எழுந்து உட்கார்ந்தேன்.

# நிலவு

★பட்டுக்கோட்டை இராசேந்திரன்★

சினத்துக் களிமண் ணாலே சிறப்புறச் செய்த வட்ட
ஏனத்தைப் போலே வானில் இருக்கும்நீ மக்கட் கின்ப
தானத்தைச் செய்தாய்! நாட்டில் தனிப்புகழ் பெற்றாய் நீல
வானத்தை வீடாய்க் கொண்டாய்; வாழிநீ நிலவே வாழி!

இனிவழி இல்லை என்றே இருள்ஓடி ஒளிய வந்தாய்!
தனிவழிச் செல்வோனுக்குத் தகுதுணை ஆனாய்; ஆனால்
கனிமொழி மாதர்க் கோநீ கனலானாய் துணைஇல் லாக்கால்!
பனிமலி மலையை நீயே பளிங்கென ஒளிரச் செய்தாய்!

நாடெலாம் சூழு கின்ற நள்ளிருள் நீக்கி உள்ள
வீடெலாம் நலமே சேர்க்கும் விரிபுகழ் மாண்பு யாவும்
ஏடெலாம் மணக்கும்: நாளும் ஏழைகள் வருந்திப் பட்ட
பாடெலாம் உன்னைக் காணப் பறந்துபோ கின்ற தென்பார்!

அகில்சந்தம் மணக்கும் தென்றல் அளவிலா இன்பம் நல்க
முகில்என்னும் உடையைப் பூண்டு முகமலர் காட்டி வந்தாய்!
திகில்உள்ளம் கொண்டார் என்றும் திருடலே தொழிலாய்க்
[கொண்டோர்
மகிழ்உள்ளம் கொண்டார் சில்லோர் மட்டிலா ஒளியைக்
[கண்டே!

விழுகின்ற அருவி நீரை வெள்ளியின் உருக்கே ஓடி
விழுகின்ற தென்னும் வண்ணம் விளங்கிடச் செய்தாய்; கூவி
அழுகின்ற குழந்தைக் கோநீ அளவிலா இன்பம் நல்கி
எழுகின்ற சிரிப்பால் என்றன் உளமெலாம் பறித்துக்
[கொள்வாய்!

செவ்விதழ் அல்லிப் பெண்ணாள் சிறக்கநீ வருதல் கண்டால்
கொவ்வைநேர் இதழ விழ்த்துக் குளிர்புனல் தனைநகைப்பாள்!
இவ்வகை நலமே செய்யும் எழில்மிகு நிலவே உன்னைக்
கவ்விய களங்கம் நீக்கும் கருத்துனக் கேனோ இல்லை?

அதற்குள் எழுந்துவிட்டீரா? எனக்கேட்டவாறு அவரும் உறக்கத்தைக் கலைத்துவிட்டு எழுந்தார். நான் ஊருக்குஉடனடியாக புறப்படவேண்டும். இன்று காலை வண்டியிலேயே செல்லவேண்டும் என்றேன். அதற்குள் என்ன தங்களுக்கு அவசரம்! இன்னும் இரண்டொருநாள் கழித்துச்செல்லலாமே என்றார். தங்கள் வீட்டில் வேண்டுமானால் இரண்டொருமாதம் தங்கிவிட்டுக்கூடப் போவேன். காரணம்! இங்கு எல்லாம் தமிழ் மணம் வீசுகிறது. தமிழர் பாண்பாடு உள்ளது. உங்கள் வீட்டைவிட்டு வெளியில் சென்றாலோ எங்கும் பிறமொழியின் துர்நாற்றம்! அதனால்தான் எனக்கு இச்சென்னையில் இருக்கப் பிடிக்கவில்லை என்றேன். அவரும் செய்வதறியாது புகைவண்டி நிலையம் வந்து வழிகூட்டி அனுப்பினர். நானும் எனது ஊர் வந்து சேர்ந்தேன்!

தலைநகரே இப்படி என்றால் - பிறநகர் உள்ள நிலையை சொல்லவா வேண்டும்!

★★★

# இழந்த காசு

வித்துவான், வை. மாணிக்கசாமி, புதுவை.

குழந்தைக்குப் பசும்பால் வாங்கக்
கொடுத்தகா சதனைக் கந்தன்
இழந்தனன்; வீட்டிற் குப்போய்
என்னதான் சொல்வ தென்றே
அழுதனன்; அந்த ஓசை
ஆங்கொரு பெரியார் காதில்
விழுந்திட, அருகில் வந்து
விம்மிநீ அழுவ தேனோ

என்றனர்; பையன் "ஐயா!
இரண்டணா கொடுத்துத் தாயார்
என்றனைப் பசும்பால் வாங்க
ஏவினள்; ஓடி வந்தேன்;
என்னவென் றுரைப்பேன் காசை
எங்கேயோ தொலைத்து விட்டேன்"
என்றவன் தேம்பித் தேம்பி
இயம்பினன்; பெரியார் சொல்வார்,

"தம்பிநீ அழுதல் வேண்டா;
தருகிறேன் இரண்ட ணாக்கள்;
செம்பினில் பாலை வாங்கிச்
சேர்த்திடு வீட்டில்" என்று
தம்முடைக் காசைத் தூக்கித்
தந்தபின் சென்றார்; சற்று
விம்முதல் அடங்கக் கந்தன்
வீழ்ந்ததன் காசைக் கண்டான்.

எடுத்தனன்; காசு முன்னர்
ஈந்தஅப் பெரியார் காண
எடுத்தனன் ஓட்டம், ஐயா!
என்னுடைக் காசைக் கண்டே
எடுத்தனன் மண்ணில் நான்என்(று)
இயம்பித்தன் பையி னின்றே
எடுத்தனன் கொடுத்த காசை
ஈர்ந்தனன் நன்றி சொல்லி.

கந்தனின் செய்கை கண்டு
களிப்புற்றார் கிழவர்; "தம்பி!
இந்தக்கா சதனை நீயே
எடுத்துக்கொள் - மகிழ்ச்சி யோடு
தந்தனன்: பெரியோ னாகித்
தரணியில் இவ்வா றுண்மைச்
சிந்தையோ டிருப்பாய் ஆயின்
சிறந்திடும் உன்வாழ் வென்றார்."

★○★

சிறுவர் பகுதி.

# அக்கக்கா!

★ ★

அக்கக்கா என்றதாம் கிள்ளை
அழகான என்கிளிப் பிள்ளை
அக்காவும் வந்தனள் தானே
அங்கே இருந்ததொரு பூனை
நிற்காமல் ஓட்டினாள் அக்கா
நில்லாமல் போனதுசு ருக்கா
அக்காஉள் ளேபோகும் முன்னம்
அக்கக்கா என்றதாம் பின்னும்!

அஞ்சாமல் ஒருதிருடன் வந்தான்
அக்காவைப் பார்த்தான்ப றந்தான்
அஞ்சாறு கோவைப்ப ழத்தை
ஆறேழு கொய்யாப்ப ழத்தை
மஞ்சள் பலாச்சுளை வித்தை
மட்டாய்க் களாப்பழக் கொத்தை
கொஞ்சமாய் வேர்க்கடலை முத்தைக்
கொடுத்தனள் உண்டதாம் தத்தை

*பலாச்சுளைவித்து - பலாக்கொட்டை*

*தத்தை - கிளி*

---

## எழுதுவார்க்கு....

குயிலுக்குக் கட்டுரையோ கவிதையோ எழுதுகின்றவர் அத்துடன் தன் முழு முகவரி எழுதுவதோடு - குயிலுக்குரிய தம் சந்தா எண் அல்லது குயில் விற்பனையாளரிடமிருந்து, குயில் வாங்குவதைக் காட்டும் நற்சான்று குறித்து அனுப்பக் கோருகின்றோம்.

அப்படி இல்லாத செய்திகள் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

★

## கட்டண விவரம்

| கட்டணம் | உள்நாடு | வெளிநாடு. |
|---|---|---|
| தனி இதழ் | 13 காசு | 16 காசு |
| ஓராண்டு | ரூ. 6—75, | ரூ. 8—50. |
| ஆறு மாதம் | ரூ. 3—37. | ரூ. 4—50. |
| வாழ்நாள் | ரூ. 100. | |

தனி இதழ் வேண்டுவோர் பதினைந்துகாசு (0-15) அஞ்சல் தலைகள் அனுப்புக.

# பெரியார் யார்?

புலவர், பழனிவேலன், பி. ஒ. எல். அரண்தாங்கி.

தன்மானம் தந்தவர் பெரியார் - மிகத்
தன்னல மற்றவர் பெரியார்
ஊருக் குழைப்பவர் பெரியார் - பல
பேருக் குழைத்தவர் பெரியார்
தமிழுக் குழைப்பவர் பெரியார் – என்றும்
தமிழ் நாட்டைக் காப்பவர் பெரியார்
சூத்திரப் பட்டத்தை அகற்ற - நாளும்
ஆத்திரம் கொண்டவர் பெரியார்
தெருவில் நடக்கவும் உரிமை - இல்லார்
திருவில் இருக்கவும் செய்தார்
தலைவர்கள் ஆக்கியோர் பெரியார் – இன்று
இலையெனக் கூறுவர் சிறியார்.
சாதி மறைத்தவர் பெரியார் – பல
சழக்குகள் தீர்த்தவர் பெரியார்
சமத்துவம் நல்கியோர் பெரியார் - உயர்வு
தாழ்வை ஒழித்தவர் பெரியார்
மூடப் பழக்கங்கள் யாவும் - மாள
முனைந்துபோர் புரிபவர் பெரியார்
இந்தியை எதிர்த்தவர் பெரியார் -- இன்றும்
முந்தித் தடுப்பவர் பெரியார்
எண்பதாம் அகவை எய்தி -- இன்னும்
அயரா துழைப்பவர் பெரியார்
தமிழர் நலத்துக்கே பெரியார் --நாளும்
நற்றொண்டு புரிகின்ற அரியார்
இத்தகை யவொரு பெரியார் -- நமக்
கென்றுமே கிடைப்பது கிடையா
இவரிறப்பை எதிர்நோக்கும் புரையோர்-தமிழ்
இறப்புக் கடிகோலும் கொடியோர்
பித்துப் பிடித்துளார் பெரியார் -- என்று
பேசும் சிறியவர் அறியார்
தமிழ்நாட்டுப் பித்துத்தான் பிடித்து – அவர்
தமிழுக் குழைக்கவே உரியார்
ஆரியர் முன்னேற்றக் கழகம் -- அவரைச்
சீறியே தாக்குதாம் எங்கும்
தமிழ்நாடு கேட்பவர் நாட்டில் – இருக்கத்
தகுதி யற்றவர் என்று
திராவிடம் கேட்பவர் கூறும் – இழி
தகைமைக் கென்சொல்வ தையோ!
எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி – ஏன்
விடுகின் றாரோ அறியேன்!

★★

# மறந்ததேனோ?

வித்துவான், பா. முத்து. புதுவை,

“ கன்னியவள் சேல்விழியைத் திண்டோள் காளைக்
கருவிழிபோய் மோதிற்று; மகிழ்ச்சி பொங்கப்
பொன்னிறத்துப் பரிதிதரும் ஒளிசேர் மாலைப்
பூம்பொழிலைப் போய்ச்சேர்ந்தார்; குன்றத்
[தோளான்
கன்னல்மொழித் தேனுண்டாள் பாவை; நல்ல
கனியிதழின் சுவைகண்டான் அவனும்” என்றே
பன்னடையில் கவியியற்றும் புலவீர்! ஏழை
படும்பாட்டை வரைவதற்கு மறந்த தேனோ?

கம்பனது கவிநலத்தைப் போற்று கின்றீர்
கவிச்சுளையைப் புய்த்தெடுத்தே அவற்றின் மீது
கொம்பினடைத் தேனூற்றித் ‘தின்னும்’ என்றே
கொடுத்திடுவீர்; மற்றதையும் ஆழ்ந்து நோக்கீர்;
வம்பளக்கும் முதலாளிக் குழைத் துழைத்தே
வள்மிழக்கும் ஏழைகளை எடுத்துப் பாடத்
தெம்பிலையோ உங்கட்கே? அன்றி எண்ணும்
திறனிலையோ? புலவர்களே! மறந்த தேனோ?

மாடியிலே உலவுகின்ற மங்கை நல்லாள்
மைவிழியை மதிமுகத்தை மறந்தி ரில்லை!
ஆடியிலே முகந்திருத்தும் அழகுப் பெண்ணின்
அணிபலவும் அணிந்துரைக்க அஞ்சீர்! ஊர்க்குக்
கோடியிலே வாழுகின்ற ஏழை உள்ளக்
கொந்தளிப்பைக் கூக்குரலை நினைத்தும் பாரீர்!
ஏடிலங்கும் பழங்கருத்தே எடுத்துச் சொல்லும்
எழிற்புலவீர்! ஏழைகளை மறந்த தேனோ?

பொருள்குவித்த செல்வர்புகழ், அன்னார் வீட்டுப்
பூவையரின் எழில்பாடும் உங்கள் பாட்டில்
இருள்குவிந்த வாழ்வெய்தி இன்னல் ஏற்கும்
ஏழைகளுக் கிடமிலையோ? வறுமை நீக்கப்
பொருள்வேண்டித் தமிழ்க்கலையை விலைக்கே
[விற்கும்
பொய்க்கஞ்சாப் போக்கையேன் மேற்கொண்
[டுள்ளீர்;
திருத்தமிழை மானத்தைத் தெருவில் விற்கும்
செயலேற்றீர்! வறியோரை மறந்த தேனோ?

# நச்சினார்க்கினியரின் ஈதல் விளக்கம்

—: கயல்விழி :—

வெளிப்படையாகப் பகைத்து நிற்பவனைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. பகைவன் என்று உலகறியக் கூறித் திரிபவனைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. பின்னர் யாரைக் கண்டு அஞ்ச வேண்டும்? கூட இருந்து அடுத்துக் கெடுக்கும் அந்த ஆரிய இனத்தைக்கண்டு அஞ்சவேண்டும். நம்முடன் சேர்ந்து இருந்தே உறவாடிக் கெடுக்கும் அந்தப் பகையைக் கண்டு அஞ்சவேண்டும் உள்ளம் என்னும் பகைமைப் புலத்திலிருந்து வெளிவரும் சொற்களுக்கு உதடு என்ற கருவிமூலம் தேன் என்னும் இனிமையைக் கலந்து கொடுக்கும் அந்த வஞ்சகர்களைக்கண்டு அஞ்சவேண்டும். "அஞ்சுக; கேள்போல் பகைவர் தொடர்பு" என்னும்வள்ளுவத் தொடரின் விளக்கம் இது.

இவ்வாறு அடுத்துக்கெடுக்கும் பகைவர்களின் எண்ணிக்கை மிகச் சிறிதாயினும் அதனால் விளையும் கேடு பெரிது. அடுத்துக் கெடுப்போரின் அளவு எள்ளின் பிளவைக் காட்டிலும் மிகச் சிறியதாக இருப்பினும் அதனால் விளையும் கேடு பெரும் அளவினது என்பதை

'எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை உள்ளதாம் கேடு"

என்னும் இத் தமிழ்மறை வாயிலாக உணர்க. இக் குறளை மனதிற்கொண்டு பார்ப்பன உரையாசிரியர்களை நோக்குங்கால் அப்போழுதுதெரியும் அவர்கள் செய்த கேடு.

விரல்விட்டு எண்ணக்கூடிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்ற ஒரு சில் உரையாசிரியார்களால் கட்டிவிடப்பட்ட பார்ப்பனச் சார்புபட்ட பதவுரையும், கருத்துரையும், அகல வுரையும், ஆழவுரையும் ஒரு பெரிய இனமாகிய தமிழ் மக்களது வாழ்க்கை முறையில் செயலில், பண்பாட்டில், எண்ணத்தில் எழுத்தில் ஒருபெரும் கீழ்மையை, மூட நம்பிக்கையை, பேதமையை ஊட்டியதுடன், பார்ப்பனனுக்குப் பொருளும் பிறவும் கொடுக்கும் முறையிலும் தெளிந்த உள்ளத்துடன் ஒளி வடிவான கடவுளைக்கண்டு வணங்கியவனிடம் புராணத்தையும் பொய்பல விரவிய இலக்கியங்களையும் புகுத்தி அவர்களது அறிவாற்றலை, அறமுறையை அதனொடு தொடர்புபட்ட ஈகையை – இன்ன பிற வற்றைக் கட்டோடு மாற்றி இருக்கிறார்கள் எனின் அது மிகையாகாது.

இல்லாதவனுக்கு இருப்பவன் கொடுப்பது ஈகை எனப்படும். "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்பது வள்ளுவம். வறியவன் எனில் பொருளால், அறிவால் கல்வியால் வறியவன். பசியால் பிணியால்துன்புற்று அலமருகின்றவேளையில் அதைக் கண்டு நெஞ்சம் கசிந்துருகி விரைந்து முனைந்து வேண்டுவன கொண்டு நீக்குதல் ஈகை. அவ்வாறு ஈயப்படும் பொருள்பணமாக இருக்கலாம் பொருளாக இருக்கலாம்.

பசித்தவனுக்கு உணவூட்டுபவன் உணவு என்னும் பொருளால் ஈகிறான், உணவு இல்லாத இடத்து பணமாகக் கொடுத்துப் 'பசியாற்று' என்று கூறும்வேளையில்ஈகை பண ஈகையாகிறது. கல்வியறிவற்ற வறியவனுக்குக் கல்வி அறிவூட்டும் ஆசானின் ஈகை கல்வி ஈகையாகிறது. பிணியால், நோவால் பதைபதைத்து நைந்து நலிந்து வருந்தி உழலும் வறியவனுக்கு மருந்து பலவற்றை முறையுடன் கொடுத்துப் பிணி நீக்கும் பெரியோனின் ஈகை உடலுழைப்பால் எழுந்ததாகும்.

ஈகை என்பதையும் ஈகையின்விதத்தையும், அது செயல்படுகின்ற பொழுது வெவ்வேறு வழிகளில் தன் வினையாற்றி கடைசியில் ஈகை என்னும் அதே பெரும் பொருளுக்குள் அடங்குவதையும் கண்டோம்.

ஈகை என்ற ஒன்று ஏன் வேண்டும்? என்று எழுகின்ற இந்த வினா விந்தையானதாக இருக்கலாம். ஆயின் அதைக் கேட்க வேண்டிய நிலையில் உள்ளேன்.

இல்லாதவன் உலகில் இருக்கிறான். அவனது இல்லாமை இருப்பவனால்தான் தீர்க்கமுடியும். விட்டெறிந்த கல் சட்டெனத் தரையை நோக்கி விழ்வதை எவ்வாறு தடுக்க இயலாதோ அவ்வாறே ஈகை என்பதும் தடுக்க இயலாத ஒன்று.

இல்லாதவனுக்குக் கொடுப்பதுதான் ஈகைஎன்னும் விளக்கத்தை வள்ளுவத் தொடரால் தெளிந்தோம். இருப்பவனுக்குக் கொடுப்பது ஈகையாகுமா எனில் அதற்கு விடையாக "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்னும் அதே வள்ளுவத் தொடரைத்தான் காட்டவேண்டும். அத்தொடர் இருப்பவனுக்குக் கொடுப்பது ஈகையாகாது என்று முற்ற முடியக் கூறுகின்றது.

இனி, முறையே பாணர், விறலியா என்னும் தமிழ் நாட்டு இசைவல்லார், ஆடல்வல்லார் ஆகிய வர்களைப் பற்றிக் காண்போம். பாணர் என்னும் பழந்தமிழ் வகுப்பார் யாழ் என்னும் இசைக் கருவியை மீட்டி இன்பம் கூட்டுபவர்கள். விறலியர் என்போர் அப்பாட்லோசைக்கு ஏற்ப மெய்ப்பாடு தோன்ற அன்னமென அழகுபட ஆடும் ஆடல் வல் லார். கலைகளின் இருப்பிடம் அவர்கள்.

கலைகள் எங்கெங்கெல்லாம் உண்டோ அங்கு அழகு உண்டு. அழகு எங்கெல்லாம் உண்டோ அங்கு இறை உண்டு. எனவே பழந்தமிழ்ப் பெரு மக்கள் இக்கலைஞர்களைக் கண்டு அவர்களது கலைத் திறத்தில் உள்ளம் பறிகொடுத்துப் பேணிப்போற்றி வந்தனர்.

இங்ஙனம் வாழும் கலைவல்லார் நிலையாக ஓரிடத்துத் தங்கி வாழும் இயல்பினரல்லர். அவர் களது வாழ்வு அந்த வாழ்வின் நோக்கம் கலையைக் காத்தோம்பி மக்களுக்கு இன்பூட்டுவதேயாம். என வே அவர்கள ஊர் ஊராக நகரம் நகரமாகச் சுற்றி தங்களது திறமையை வெளிப்படுத்திக் காட்டுவர். இவர்களது திறமையைக் கண்டு கொடுப்பார் கொடுக்கும் பொருள்களைப் பெற்று வாழ்வது இவர் களது வாழ்க்கை நிலையாகும்.

இவ்வாறு இவர்கள் பிறரிடத்திருந்து பெறுவதை இரத்தல் அல்லது பிச்சையெடுத்தல் என்ரு கூற முடியும்? இவர்கள் தங்கள கலைவன்மையைக் காட்டிப் பெறும் இது-பரிசாகும்.

எனவே வறியவர்கள் பிறரிடத்திருந்து பெறுவது ஏற்றல் அல்லது பிச்சையெடுத்தல் என்றும் கலை வல்லாராகிய பாணர்,புலவர்விறலியர் ஆகியவர்கள் பிறரிடத்திருந்து பெறுவது பரிசு என்றும் கூறப்படும்

வாங்கும் முறையில் ஏற்றல் என்றும் பரிசு என் றும் வேறுபடுத்தி உரைத்ததற்கேற்ப பெற்றுக் கொள்பவரின் (அதாவது வறியவர் கலைஞர் ஆகிய வர்களது) தன்மைக்குத் தக்கபடி கொடுத்தலின் தன்மை வேறுபடுமா எனின் வேறுபடாது. வறிய வருக்குக் கொடுத்தலும் ஈகையே. கலைஞர்கட்குக் கொடுத்தலும் ஈகையே.

எனவே கலைவல்லாராகிய பாணர் விறலியர் ஆகியோர் பிறரிடமிருந்து பெற்று வாழ்தல் தவிர்க்க முடியாததொன்று. ஏன் எனில் அவர்கள் ஓரிடத்து நிலைத்து வாழும் தன்மையரல்லர். அவ்வாறு பிறரி டம் பெற்றுவாழும் மக்கள் உள்ளவரை ஈதல் உள்ளம் கொண்டவர்கள் இருந்தாக வேண்டும். எனவே நாம் முன்னர் "ஏன் ஈகை வேண்டும்?" என்று கேட்ட கேள்விக்கு இப்பொழுது விடை கண்டவர்களாக இருக்கிறோம்

மேற்கண்ட அடிப்படையில், அதாவது வறியவர் களுக்கும் கலை வல்லவர்களுக்கும் கொடுக்கும் முறை யில் எழுந்த ஈதல் பின்னர் எவ்வாறு திரிவிடத்துப் பட்டிருக்கிறதென்று காணுதல் நலம்.

நச்சினார்க்கினியர் பார்ப்பனர் எனக்கண்டோம் அவர்கட்கு உரிய குணமெல்லாம் எஞ்சாது பெற்ற நஞ்சு எனவும் கண்டோம். இனி அன்னவர் தந்த ஈதல் விளக்கத்தையும் காண்போம்.

தமிழ்நாட்டுப், பேரரசர், சிற்றரசர், வேளிர் என்பார் பாணரிடத்தும், விறலியரிடத்தும், புலவ ரிடத்தும் பேரன்பு கொண்டு பெரும் பொருளை ஈந்து சிறப்புச் செய்து பாராட்டி வந்தனர்.

இவ்வாறு தமிழ் வருப்பாருக்குக் கிடைத்து வரும் இந்தப் பொருளும் பிறவும் தம் இனத் தார்க்குக் கிடைக்க வேண்டும் என்ற நரிச்செயலின் அடிப்படையில் ஈதலுக்குப் புது விளக்கம் ஒன்று கட்டிவிடப்பட்டது.

(தொடரும்)

## புரட்சிக்கவிஞரவர்களின்
### சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

| நாள் : | | இடம் : |
|---|---|---|
| 11—4—59 | ... | இராமநாதபுரம். [கோவை] |
| 12—4—59 | ... | கோயம்புத்தூர். |
| 13—4—59 | ... | ஷை |
| 19—4—59 | ... | கரந்தைப் புலவர்கல்லூரி. |
| 20—4—59 | ... | திருச்சி. |

வணக்கம் டிரான்ஸ்போர்ட் டாரின் திருமண நிகழ்ச்சி.)

## விற்பனையாளர்க்கு...

பட்டியல் பாக்கியை உடனடியாக் அனுப் புமாறு பலமுறை அறிவித்தும் இதுவரை அனுப்பாதிருக்கும் விற்பனையாளர்கள் இம்மாத முடிவுக்குள் அத்தொகையை அனுப்பிவிட வேண்டும. அப்படி அனுப்பாதவர்கள்மேல் வழக்குமன்றம் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—அமைச்சர்.

## எழில்மிகு குயிலே!

இரத்தினகுலிசன், கீரமங்கலம்.

*(தனியடிக் கண்ணிகள்)*

வண்டுறை சோலை தன்னில்
வதியுநற் குயிலே நீதான்
பண்டைநாள் முதலே இன்பப்
பண்ணிசைத் துவகை கொண்டாய்!
வண்டினைப் போலே இன்ப
மதுவையும் ஒருங்கு கூட்டி
வண்டமிழ் மக்கட் கெல்லாம்
வகையுற ஈந்துண் கின்ருய்!
பைந்தமிழ்ச் சோலை யின்பம்
பலவுமே காட்டும் நீதான்
கண்டவர் உளங்கள் ஈர்க்கும்
காந்தம(து) எங்கே கொண்டாய்?

காட்டினில் திரிந்தே இன்பக்
கனியிலே சுவையைக் காண்பாய்
பாட்டிலே இன்பங் கண்டு
பரவசம் ஆவாய் ஆனல்
நாட்டிலே நடப்ப தெல்லாம்
நயமதாய் நவில்கின் ருயே!
நற்றமிழ் நாட்டை இன்று
நலிவுறச் செய்யும் நோயை
முற்றுமே ஒழிக்க நல்ல
மூலிகை அளிக்கும் நீதான்
பெற்றதும் எங்கே உன்றன்
பொழிவிலா கனியி லாசொல்?

கள்ளமில் உள்ளங் கொண்டு
கனியுனும் குயிலே நீதான்
எல்லையில் உலகந் தோறும்
எழிலுற உலவு கின்ருய்
தொல்லைசேர் பகையும் கொன்ருய்
துணிவுநீ மிகவும் கொண்டாய்!
எல்லையில் புகழும் வீர
எழுச்சியும் கொண்டாய் நீயே
எந்தமிழ் நாட்டை மீட்பாய்
இதுவுனக் கரிதோ? இல்லை! ★

## ஆ காசவாணி!

புதுப்பாளையம், புதுமதியன்.

[ எடுப்பு ]

*காணீரோ? கண்டுமனம் நாணீரோ? – ஆகாச*
*வாணியெனும் சொல்இங்கே வந்து புகுந்தவிதம்*
*(காணீரோ...)*

[ தொடுப்பு ]

*தமிழ்வளர்ப்பது போலக் காட்டுதல் வெறும்பாணி*
*தமிழர்நம் நெஞ்சிலே அடித்தனர் கூராணி!!*
*(காணீரோ...)*

[ முடிப்பு ]

*தமிழ்ச்செம்மையோ அழியாதிருந்தும் மருதாணி*
*தகர்த்ததை ஆண்டிட வந்தனள் 'இந்தி'ராணி*
*கமழும் முத்தமிழ்மொழி காத்திடுவோம் பேணித்*
*தமிழே நமைக்கரை சேர்த்திடும் பெருந்தோணி!*
*தாவிடும் வீரத்தால் ஏறுவோம் புகழேணி*
*தடுத்தொழிப்போம் பகை 'ஆகாசவாணி'*
*சாவினை எண்ணுமல் வகுப்போம் போர்ப்பாணி*
*சரித்திரம் புகழ்வதே நமக்கெலாம் கைக்காணி!*
*(காணீரோ...)*

<★>

## செந்தமிழ்!

இராசன், பனங்குளம்.

*பள்ளிக்குச் சென்றிட வேண்டும் கண்ணே! – நீ*
*பண்போடு நடந்திட வேண்டும் கண்ணே!*
*பாரிலே பண்புள்ள நம் தமிழைக் – கற்றுப்*
*பரப்பிடல் வேண்டும் நம் செந்தமிழை.*

*வேளை தவருது வேகமாய்ப் பள்ளிக்கு*
*விருப்புடன் சென்றிட வேண்டுங் கண்ணே!*
*வள்ளுவன் வழங்கிய நம் தமிழைக் – கற்று*
*வளர்த்திட வேண்டும் நம் செந்தமிழை.*

*மும்முடி மன்னர்கள் கண்ணெனப் போற்றிய*
*முத்தமிழை – முன்னர் வளர்த்து வந்த*
*மொழிகளில் மூத்தநம் செந்தமிழைக் – கற்றுப்*
*போற்றுதல் வேண்டும் நம் செந்தமிழை.*

*கண்ணகி கற்பும்நற் காளையர் வீரமும்*
*காணத் தமிழன்னை வாழ்த்தி நின்ருள்!*
*காசினி போற்றிடும் நம் தமிழைக் – கற்றுக்*
*காத்திடல் வேண்டும்! நாம் செந்தமிழை.*

# குயில்

Regd No. M. 7030.

## இந்தியா?

★★

தமிழை ஒழிப்பவன் உலகினில் இல்லை
தமிழை எதிர்த்தவன் வாழ்ந்ததும் இல்லை (தமிழை)

தமிழை ஒழிக்க இந்தியை நுழைப்பவர்
தம்வர லாற்றுக்கு மா சிழைப்பவர் (தமிழை)

இன்பத் தமிழ்மொழி உலக முதன்மொழி!
இந்தி மொழியோ ஒழுங்கிலா இழிமொழி!
என்ன போயினும் தமிழர்க்குத் தமிழ்மொழி
இன்னுயிர் ஆகும் வாழ்க தமிழ்மொழி (தமிழை)

ஒருமொழி ஓரினம் கொண்டதோர் நாடு
பிறன்அதில் அடிவைக்க நினைப்பதும் கேடு
பெருமொழி அழித்தும் பேரினம் அழித்தும்
பெறுவது நாடன்று தன்பிண மேடு (தமிழை)

தீதுற ஆள்வதோர் ஆட்சியே அன்று
செந்தமிழ் நாட்டிலே இந்தியா நன்று?
மோதுறும் பதவி நிலையிலா ஒன்று;
முழங்காற்றங் கரைமரம் நிலைக்குமா நின்று? (தமிழை)

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்தென்பர் வித்தகர்
தீக்கனவு காண்கின்றார் இந்திபற் றியவர்
தெற்குச் சூறைக்கு நிற்காது வடசுவர் (தமிழை)

★★

ஆசிரியர், வெளியீடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.